අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව<br>எனது இல.<br>My Ref. | ED/09/12/12/07/07 | ඔබේ යොමුව<br>உமது இல.<br>Your Ref. | | දිනය<br>திகதி<br>Date | 2023.12.29 |

**சுற்றுநிருப இலக்கம் : 52/2023**

*அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,*
*அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,*
*அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்.*

***<u>பாடசாலைகளில் நீச்சல் தடாகங்கள், கேட்பொர் கூடங்கள்/ அரங்கங்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டரங்குகள் உட்படலாக பௌதீக வளங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்.</u>***

*பாடசாலைகளில் நீச்சல் தடாகங்கள், கேட்போர் கூடங்கள், அரங்கங்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டரங்குகள் உட்படலாக பௌதீக வளங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக இச் சுற்றுநிருபத்தினூடாக ஆலோசனைகள் வழங்கப்படும் என்பதுடன், இதற்குரியதாக என்னால் வெளியிடப்பட்டுள்ள 2012/34 இலக்க சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*1.0 பாடசாலைகளில் நீச்சல் தடாகங்கள்/ கேட்போர்கூடங்கள்/ அரங்கங்கள் மற்றும் விளையாட்டரங்குகளின் உரிமை*

*1.1 அரசாங்க நிதியைக் கொண்டு அல்லது வெளித் தரப்பினரின் அன்பளிப்பாக அரசாங்கப் பாடசாலை காணியில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகங்கள், கேட்போர் கூடங்கள், அரங்கங்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டரங்குகள் உட்படலாக பௌதீக வளங்களின் முழுமையான உரிமை அரசாங்கத்திற்கே உரித்தாகும் என்பதுடன், அவற்றிற்குரிய அனைத்து வளங்களும் பாடசாலையின் சொத்துக்களாக உரிய ஆவணங்களில் பதியப்படல் வேண்டும்.*

*1.2 குறித்த பௌதீக வளங்களை முறையான முகாமைத்துவத்துடன் பேணுவதற்குரிய நடவடிக்கைகளை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டிற்கு அமைவாக அதிபரது மேற்பார்வையின் கீழ் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*1.3 இதற்காக தேவையான வகையில் ஒவ்வொரு பௌதீக வளங்களையும் முகாமை செய்வதற்கான உப குழுக்களை, கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டிற்கு அமைவாக நியமித்துக்கொள்ள முடியும்.*

*1.4 இயன்றவரையில் எப்போதும் உப குழுக்களுக்கு உரிய துறை தொடர்பான அறிவுடன் கூடிய உறுப்பினர்களை நியமித்துக்கொள்ள வேண்டும். உரிய பணிகள் மற்றும் பொறுப்புக்களை அதிபர் உப குழுவினரிடம் கையளிக்க வேண்டும்,*

*2.0 பாவணை, பராமரிப்பு மற்றும் திருத்தச் செயற்பாடுகள்*

*2.1 நீச்சல் தடாகங்கள், கேட்போர் கூடங்கள், அரங்குகள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டரங்குகள், உட்படலாக பௌதீக வளங்களின் பாவணையின் போது தமது பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் வெளித் தரப்பினருக்கு கல்விசார் செயற்பாடுகளுக்காக வழங்கும் போது பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பரிந்துரையுடன் அதிபர் செயற்பட முடியும். இருப்பினும் கல்வி சார் செயற்பாடுகளுக்குப் புறம்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் அதிபரின் பரிந்துரையுடன் வலயக் கல்விப் பணிப்பாளரின்/ தேசிய பாடசாலைகள் பணிப்பாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.*

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

2.2 இவ் வளங்களை பாவணைக்கு வழங்குதல், அங்கத்துவம் வழங்குதல் மற்றும் அதற்குரிய கட்டணங்களை அறவிடுதல் தொடர்பாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

2.3 நீச்சல் தடாகத்தை பயன்படுத்தும் ஒவ்வொரு வகுதியின் கீழும் அங்கத்தவர்களை வகைப்படுத்தி அவர்களது தகவல்கள், அறவிடப்படும் கட்டணங்கள் ஆகியன தொடர்பான விபரங்களை பதிவு செய்யக்கூடிய வகையிலான ஆவணம் ஒன்றை பராமரிப்பதற்கும். அதனுடன் தொடர்புடைய கட்டடங்கள், கடைகள் ஆகியவற்றிடமிருந்து குத்தகைப் பணத்தை அறவிடுதல் போன்றன தொடர்பாகவும் கேட்போர் கூடம் தொடர்பான ஆவணங்களை பராமரிப்பதற்கும், அதற்குரிய ஒப்பந்தங்கள், விலை மனுக்களை வழங்குதல் தொடர்பான கோவைகளை பேணுவதற்கும் சகல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான ஆவணங்களைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

2.4 நீச்சல் தடாகங்கள், கேட்போர் கூடங்கள், அரங்குகள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டரங்குகள், உட்படலாக பௌதீக வளங்களுக்குரிய கட்டுமானங்கள்/ திருத்தச் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளின் போது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டின் ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும்.

3.0 நிதிப் பாவணை

3.1 பாடசாலையின் வருடாந்த வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகளை வருடம் ஆரம்பிக்க முன்னர் தயாரித்து அனுமதி பெற்றுக்கொள்ளும் நீச்சல் தடாகங்கள்/ கேட்போர் கூடங்கள்/ அரங்குகள்/ மற்றும் விளையாட்டரங்குகள் ஆகியவற்றிற்கான வரவு செலவு உருப்படிகளையும் இதில் உள்ளடங்குதல் வேண்டும்.

3.2 நீச்சல் தடாகங்கள்/ கேட்போர் கூடங்கள்/ அரங்குகள் மற்றும் விளையாட்டரங்குகளின் நாளாந்த வருமானத்தை சேகரிப்பதற்காக முறையான அனுமதி பெற்று நுழைவுச் சீட்டுக்களை அச்சிட்டுக் கொள்ள வேண்டும். குறித்த நுழைவுச் சீட்டுக்களில் தொடர் இலக்கங்கள், அறவிடப்படும் தொகை, வழங்குனர் பெயர் தொடர்பான விபரங்கள் கட்டாயமாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து நுழைவுச் சீட்டுக்களையும் தொடர் இலக்க வரிசையில் அடியிதழ் ஆவணத்தில் உள்ளீடு செய்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முன்னிலைப்படுத்தி உத்தியோகபூர்வ பதவி முத்திரையைப் பதித்ததன் பின்னரே அவற்றை வழங்க வேண்டும்.

3.3 நுழைவுச் சீட்டுக்களூடான அன்றாடம் சேகரிக்கப்படும் மொத்த வருமானத்தையும் அதே நாளில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் அனுமதிக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளை வழங்கியதன் பின்னர் உரிய கணக்கில் வரவு வைத்து குறித்த நிதியை தாமதமின்றி வங்கிக் கணக்கில் வைப்பிலிடல் வேண்டும்.

3.4 இந்த வளங்களை பாவணைக்கு வழங்குவதனூடாக கிடைக்கப்பெறும் வருமானங்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அனுமதிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை வழங்கியதன் பின்னர் உரிய கணக்கில் வரவு வைத்தல் வேண்டும். குறித்த நிதியை தாமதிக்காமல் வங்கியில் வைப்பிலிடல் வேண்டும்.

3.5 நீச்சல் தடாகங்கள்/ கேட்போர் கூடங்கள்/ அரங்குகள் மற்றும் விளையாட்டரங்குகளூடாக கிடைக்கப்பெறும் அனைத்து வருமானங்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கில் வைப்பிலிட்டு, அந்த வங்கிக் கணக்கினூடாக உரிய செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வருமானம் மற்றும் செலவுகளை நிர்வாக லெஜரின் ஊடாக நிர்வகித்து தகவல்களை பேணி வருதல் வேண்டும். இதில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக குழு அவசியம் எனத் தீர்மானிக்கும் வேறு ஆவணங்களையும் பேண முடியும்.

3.6 வருடாந்தம் கடைகள் மற்றும் ஏனைய பௌதீக வளங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கும் போது சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதற்குரிய பெறுகைச் செயன்முறைகளைப் பின்பற்றி விலைமனுக்களை கோரி வாடகை பெறுநர்/ குத்தகை பெறுநரை தெரிவுசெய்தல் வேண்டு. இதன் போது தெரிவு செய்யப்பட்ட வாடகை பெறுநர்/ குத்தகை பெறுநருடன் முறையான உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டு, குறிப்பிட்ட வாடகைத் தொகை அறவிடப்படவேண்டும் என்பதுடன் வாடகை அறவிடல் தொடர்பான ஆவணம் ஒன்றும் பராமரித்துப் பேணப்படல் வேண்டும்.

3.7 பொருளாளர் அடி இதழ்களைக் கொண்டு நீச்சல் தடாகங்களுக்காக அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள், வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள், மீதியாக உள்ள நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் வருமானம் ஆகியவற்றை பரிசோதித்து பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு/ முகாமைத்துவக் குழுவில் மாதாந்த அறிக்கைகளை முன்னிலைப்படுத்த வேண்டும்.

4.0 பணிக்குழுவினரை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் கொடுப்பனவுகள்

4.1 நீச்சல் தடாகங்கள், கேட்போர் கூடங்கள், அரங்குகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டரங்குகளில் பணியாற்றுவதற்காக கல்விசாரா பணிக்குழுவினரை ஆட்சேர்ப்பு செய்வதாயின் கல்வி அமைச்சின் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டிற்கமைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.2 அவ்வாறே, பாடசாலை மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்குவதற்காக வெளிப் பயிற்றுவிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது அவர்களது துறைசார் அறிவு மற்றும் ஒழுக்கம் சார் நடவடிக்கைகள் தொடர்பாக மிகுந்த கவனத்தை செலுத்தி அவர்களைத் தெரிவு செய்யவேண்டும் என்பதுடன் கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 2009/20 தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். வெளி பயிற்றுவிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது நேர்முகப் பரீட்சையின் போது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அல்லது வலயக் கல்வி அலுவலகத்தின் உடற் கல்விப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளரையும் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

5.0 பாடசாலைகளில் நீச்சல் தடாகங்கள், கேட்போர் கூடங்கள், அரங்குகள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டரங்குகள் உட்படலாக பௌதீக வளங்களின் பயன்பாட்டின் போது தமது பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் வெளிச் செயற்பாடுகளுக்காக அவற்றை பயன்படுத்தும் போது அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் போது பாடசாலைகளை நடாத்திச் செல்லும் செயற்பாடுகளுக்கு எந்தவித தடங்களும் ஏற்படாத வகையில் ஒழுக்கம் காக்கப்படக்கூடிய வகையில் உரிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும்.

எம்.என் ரணசிங்ஹ
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :-

1. மாகாண பிரதம செயலாளர்கள்
2. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. கல்வி அமைச்சின் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள்
8. கல்வி அமைச்சின் அனைத்து கிளைப் பிரதானிகள்